# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பெந்தகோஸ்தே ஞாயிறு | 24 மே 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*




பெந்தகோஸ்தே இயேசுவின் வாக்குறுதி நிறைவேறிய தருணம் ஆகும். ஒரு காலத்தில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அச்சத்தில் இருந்த சீடர்கள் நற்செய்தியின் துணிவுமிக்க சாட்சிகளாக உருமாற்றப்பட்டனர். இந்த வல்லமையான தருணம், தூய ஆவியார் இன்றும் திருஅவையிலும் ஒவ்வொரு நம்பிக்கையாளர்களுக்குள்ளும் புதிய வாழ்வை நம்முள் மூச்சாக உட்செலுத்துகிறார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5)
MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர்பணிகள் 2:1-11
திருப்பாடல் 104: 1, 24, 29-31, 34
1 கொரிந்தியர் 12: 3-7, 12-13
யோவான் 20: 19-23

பெந்தகோஸ்தே நாளில் சீடர்கள் வல்லமை பெற்றதுபோலவே, நாமும் தூய ஆவியாரின் உருமாற்றிடும் உடனிப்பிற்கு நம் உள்ளங்களைத் திறக்க அழைக்கப்படுகிறோம். தூய ஆவியாரின் கொடைகளைப் பெற்றுக்கொள்ள, நாம் முதலில் ஆழமான இறைவேண்டல் வாழ்க்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும். நாம் மன்றாடும்போது, தூய ஆவியார் நம்மை வழிநடத்திடவும், நம்மை வடிவமைத்திடவும், கடவுள் நமக்குள் வைத்திருக்கும் சிறப்புத் திறமைகளை அடையாளம் காண உதவிடவும், நமக்காக இயேசு தயார்படுத்தி வைத்திருக்கும் நோக்கத்தை நோக்கி நம்மை வழிநடத்தவும் அனுமதிக்கிறோம்.

கடவுளுடையக் கொடைகளைக் கண்டறியும் இந்தப் பயணம், குறிப்பாக இளைஞர்களுக்கு மிகவும் முக்கியமானது. அவர்கள் நம்பிக்கையில் வளரவும், தங்கள் திறமைகளை அடையாளம் காணக் கற்றுக்கொள்ளவும், துணை நிற்பதில் குடும்பங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தக் கொடைகள், பணிசெய்வது, படைப்பாற்றல். தலைமைத்துவம், அல்லது இரக்கச்செயல்களில் வெளிப்பட்டாலும், இந்த திறமைகளை வெறும் தனிப்பட்ட சாதனைகளாகக் கருதாமல், பிறருக்குப் பணிசெய்வதற்கும், கடவுளை மாட்சிப்படுத்துவதற்கும், கடவுள் அளித்தக் கொடைகளாகக் காணுமாறு குடும்பங்கள் இளைஞர்களுக்கு வழிகாட்ட முடியும்.

அதே வேளையில், தூய ஆவியின் கொடைகளைப் பெறத் தயாரிப்பில் இருக்கும் உறுதிபூசுதல் மாணவர்களுக்குத் துணையாக இருப்பதில் பங்கு சமூகத்திற்கு ஒரு முக்கியமான பணி உள்ளது. மறைக்கல்வியாளர்கள், அருட்பணியாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பரந்து விரிந்த சமூகத்தின் வழிகாட்டுதலின் மூலம், இளைஞர்கள் தாங்கள் பெறவிருக்கும் அருளடையாளத்தின் ஆழமான பொருளைப் புரிந்துகொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். பங்குத்தளம் அவர்களை ஆதரிக்கும், அவர்கள் சொல்வதைக் கேட்கும் மற்றும் திருஅவையின் செயல்மிகு உறுப்பினர்களாக வாழத் தூண்டப்படும் ஒரு இடமாக மாறுகிறது.

ஆகவே, பெந்தகோஸ்தே என்னும் நிகழ்வு, தூய ஆவியானவருக்கும் நாம் காட்டும் திறந்த மனப்பான்மையும், நம் வாழ்வில் அவருடைய உடனிருப்பிற்கு நாம் காட்டும் பிரதிபலிப்பையும் பற்றிச் சிந்திக்க நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது. குடும்பங்களும் பங்கு சமூகங்களும் இளைஞர்களுடன் பயணிக்கும்போது, அவர்கள் பெறும் கொடைகள் மறைந்திருக்க வேண்டியவை அல்ல, மாறாக கடவுளின் அரசைக் கட்டியெழுப்புவதற்காகப் பகிரப்படவேண்டியவை என்பதைக் கண்டறிய அவர்களுக்கு உதவுகிறோம். இந்தத் துணையின் மூலம் தூயஆவியார் தமது பணியைத் தொடர்கிறார். ஒவ்வொரு தலைமுறையிலும் திருஅவையைப் புதுப்பிக்கிறார்.

✝

**இறைவேண்டல்**

வாரும் தூய ஆவியே, உம் அடியவரின் உள்ளங்களை நிரப்பிடுவீர். அவற்றில் உம் அன்புத் தீயை மூட்டியருள்வீர். உமது தூய ஆவியை நீர் அனுப்ப, அவை படைக்கப்பெறுகின்றன. மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 21/2026

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org